# மனித விருத்திக் கட்டங்களில் சமூக நடத்தையின் வகிபங்கு – ஒரு சமூக உளவியல் பகுப்பாய்வு

ஐ.எல்எம்.மாஹிர்
*சிரேஷ்ட விரிவுரையாளர் (மெய்யியல்), சமூக விஞ்ஞானங்கள் துறை*
*கலை கலாசாரப்பீடம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை*

**ஆய்வுச்சுருக்கம்**

*சமூக நடத்தை என்பது தனிநபர்களிடையே அல்லது குழுக்களிடையே இடம்பெறும் சமூக இடைவினையாற்றலின் விளைவாகும். சமூக நடத்தையானது தனிநபர்களது நடத்தைகளை ஒழுங்கமைப்பான நோக்கில் பொதுமைப்படுத்துகின்றது. அதாவது பிறந்தது முதல் மனிதன் படிப்படியாகச் சமூகமயமாதலை எதிர்கொள்கிறான். இதன்போது அவனது சமூகத்தொடர்பு மற்றும் சமூக உறவு என்பன விருத்தியடைகின்றன. சுற்றுச்சூழலிலிருந்து மனிதன் பெறுகின்ற அனுபவம், மற்றும் இடைவினையாற்றல்கள் அவனைச் சமூக நடத்தையுடையவனாக உருவாக்குகின்றது. அவ்வகையில் சமூக நடத்தையினைத் தீர்மானிக்கும் காரணிகளாக ஒத்துழைப்பு, போட்டி நிலை, கலாசாரம், சமூக நெறிமுறை, சுய வெளிப்பாடு, சமூக மனப்பாங்கு, பொதுசன அபிப்பிராயம், பிரச்சாரம், சமூகக்குழுக்கள், நாகரீகப்பரம்பல்,மற்றும் சமூக மாற்றம் என்பன அமைகின்றன. இத்தகைய நோக்கில் ஒவ்வொரு மனித விருத்திப் பருவங்களிலும் சமூக நடத்தையின் வகிபங்கு குறித்து ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகின்றது. இதற்காக உளவியல் பகுப்பாய்வு முறை மற்றும் விபரிப்பு முறை என்பன ஆய்வு முறைமைகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது இரண்டாம்நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட பண்புசார் ஆய்வாகும்.*

**பிரதான சொற்கள்:** *சமூக நடத்தை, சமூக இடைவினை, சமூகமயமாதல், சமூகப்பங்குபற்றல்*

## அறிமுகம்

சமூக நடத்தை என்பது பொதுவாக ஒருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களுக்கு நன்மையளிக்கும் விதமாக நடைபெறும் தனிநபர்களுக்கிடையிலான இடைவினையாற்றல் என வரையறுக்கப்படுகின்றது. சமூக நடத்தை மனிதர்களுக்கு மட்டுமன்றி விலங்குகளுக்கும் பொதுவானது என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். சமூக நடத்தையானது கலாசாரம்,வழக்காறுகள்,நாகரீகம், மொழி, சட்டம் போன்ற சமூகச் சூழ்நிலைகளால் தீர்மானிக்கப்படுவதும், மாற்றமுறுவதுமாகும். இவை தனிநபர்களது நடத்தையினை ஒழுங்கமைப்பதோடு, சமூக நடத்தையினை உருவாக்கும் காரணிகளாகவும் அமைகின்றன.

அதாவது மனிதக் குழுக்கள் ஒன்றிணைகின்ற போது உருவாகும் மாறுபட்ட கலாசாரங்கள், வழக்காறுகள், மொழிகள், பழக்க வழக்கங்கள் என்பவற்றை அறிந்து கொள்ளவும், ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளவுமான சூழல் சமூக இணைவினால் ஏற்படுகின்றது. இது மனித நடத்தைகள், குழு நடத்தைகள், பரஸ்பரப் புரிந்துணர்வு, சமூகப் பரிமாற்றம் என்பவற்றைத் தோற்றுவிக்கின்றது. இத்தகைய சமூக இடைவினைகளினூடாக தனிநபர் நடத்தைகள் சமூக நடத்தைகளாக ஒழுங்கமைக்கப்படுகின்றன.

சமூக இடைவினை என்பது ஒரு நபருக்கும் இன்னொரு நபருக்குமிடையில் அல்லது ஒரு நபருக்கும் ஒரு குழுவிற்குமிடையில் அல்லது ஒரு குழுவிற்கும் இன்னொரு குழுவிற்குமிடையிலான நடத்தைப் பரிமாற்றங்களாகும். ஒரு குழந்தையின் சமூக இடைவினையானது பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள், சமூக நிறுவனங்கள் என படிப்படியாக விரித்தியடைகின்றது. இப்போக்கு படிப்படியான சமூக நடத்தையின் மேம்பாட்டுக்குக் காரணமாகின்றது.

## சமூக நடத்தையில் சமூகமயமாதலின் செல்வாக்கு

மனிதன் பிறக்கின்றபோது சமூகத் தொடர்புடையவனாகப் பிறப்பதில்லை. சமூகமயமாதலுக்கு முன்னர் குழந்தைகள் சுய மையம் கொண்டவர்களாகக் காணப்படுவர். படிப்படியான இடைவினைத் தொடர்பு மற்றும் கற்றல் என்பன சமூகத் தொடர்பினை ஏற்படுத்துகின்றன. இதனை சமூகமயமாதல் செயற்பாடு எனலாம். சமூகமயமாதல் படிப்படியானவிருத்திச் செயற்பாடாகும். எனினும் சமூகமயமாதல் என்பது ஒரு எளிய செயன்முறையன்று. அதாவது ஒரு குழந்தையின் நடத்தையினை வடிவமைப்பதில் பெற்றோரினதும், குடும்பத்தினரதும் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். குழந்தைகள் உணவு, உடைப் பழக்க வழக்கங்கள், பேச்சு, நடத்தை என்ற அனைத்தையும் பெற்றோரிடமிருந்தே கற்றுக் கொள்கின்றனர். மேலும் ஒழுக்க மற்றும் சமூக நடத்தைகளான பிறருடன் பேசும் முறை, பிறரது கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் முறை, பிறரோடு நடந்து கொள்ளும் முறை, பரஸ்பரப் புரிந்துணர்வு என்பனவற்றையும் குழந்தைகள் வீட்டுச் சூழலிலிருந்தே கற்றுக் கொள்கின்றனர். இதன்பின்னரானபாடசாலை, விளையாட்டுக் குழுக்கள்,அயலவர்களுடனான சமூகமயமாதல்சமூக நடத்தைகளைத் தீர்மானிக்கும் காரணிகளாகின்றன.

தனிநபர் நடத்தை பற்றிய நேரடியானதும், வெளிப்படையானதுமான விமர்சனங்கள் தனிப்பட்ட மற்றும் சமூக மனப்பாங்கினை மாற்றியமைக்கக் கூடியவைகளாகும். இதன் மூலம் தனிநபர் தமது பலம், பலவீனங்களை அறிந்து கொள்வதுடன், பல்வேறு சமூகக் குழுக்களுக்கு ஏற்றவாறு பொருந்துதலை மேற்கொள்ளக் கற்றுக்கொள்கின்றனர். மேலும் சமூகமயமாதலைத் தீர்மானிப்பவையாக புத்தகங்கள், பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, சினிமா, சமூக வலைதளங்கள், இணையம், காணொளிகள் போன்றவற்றையும் குறிப்பிட முடியும். இவற்றிலிருந்து பெற்றுக்கொள்கின்ற சமூக அனுபவங்கள், புதிய மனிதர்களுடனான தொடர்பு, கருத்துப்பரிமாற்றம், கலாசாரப் பரிமாற்றம் என்பன சமூக நடத்தையில் தாக்கம் செலுத்துபவையாக அமைகின்றன.

இத்தகைய சமூகத் தொடர்பின் மூலம் ஒருவரது ஒழுக்க, மற்றும் சமூகக் கட்டமைப்பு மாற்றமடைகின்றது. இதன்போதான சமூக இணக்கம் பிற மனிதர்களைப் புரிந்து கொள்ளும் திறனை விருத்தியடையச் செய்கின்றது. இவ்வாறு தனிநபர் வேறுபாடுகளைப் புரிந்து சமூக நடத்தைகளை அமைத்துக் கொள்வதன் மூலம் சமூகமயமாதல் நிகழ்கின்றது எனலாம்.

சமூகமயமாதல் என்பதில் போலச்செய்தல், குறிப்பால் உணர்த்தல் அல்லது பரிந்துரை செய்தல், அனுதாபம் போன்றன முக்கிய பங்கினை வகிக்கின்றன. இதனை உளவியலாளர் மக்டூகல் பின்வருமாறு விளக்குகின்றார். அதாவது போலச்செய்தல் என்பதில் பெரியோர், மற்றும் விருப்பமான தலைவர்களைப்போல் செயற்படுதல், ஏனையவர்களது தெரிவுகளைப் பிரதி செய்தல் போன்றவை உள்ளடங்கும். உளவியலாளர்கள் ஒத்த நடத்தையினை விளக்க போலச்செய்தல் என்பதைப் பயன்படுத்தினர். எனினும் ஒத்த நடத்தையானது சாத்தியமான பல காரணிகளில் தங்கியுள்ளது என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது. மேலும் வளர்ந்தோர் மத்தியில் நிகழும் போலச்செய்தல் நியாயமான காரணங்களைக் கொண்டு காணப்படும்.

அதிகம் போலச்செய்தலில் ஈடுபடுகின்ற விருத்திக் கட்டமாக குழந்தைப் பருவத்தினரைக் குறிப்பிடலாம். சமூகத்தில் குழந்தைகள் பல்வேறு வகிபங்கினைப் பெறும் மனிதர்களை அவதானிக்கின்றனர். அதாவது பெற்றோர், பாடசாலையில் ஆசிரியர்கள், நண்பர்கள், தொலைக்காட்சிக் கதாபாத்திரங்கள் போன்றோரையும் கவனிப்பதோடு அவர்களை முன்மாதிரிகளாகக கொண்டு செயற்படவும் ஆரம்பிக்கின்றனர். இவர்களிடமிருந்தே அவர்கள் சமூகக்கருத்தியல்களையும், சமூகப் போக்கினையும் கற்றுக்கொள்கின்றனர். குழந்தைகள் முன்மாதிரிகளாகக் கொள்ளும் நபர்களின் பிரதிகளாக செயற்பட விரும்புவர். இது மிகச்சாதாரணமான ஒன்றாகும். அதாவது குடும்பப்பாத்திரம், பாலினப்பாத்திரம், சமூகப்பாத்திரம் என்பவற்றுக்கான நடைமுறைகளை குழந்தைகள் தாமாகப் பார்த்துக் கொள்வதுடன் அவ்வாறே செயற்படவும் ஆரம்பிக்கின்றனர்.

இத்தகைய போலச்செய்தல் இரண்டு வகைப்படுகின்றது. குழந்தைகள் சிரித்தல், அழுதல், பேசுதல், மொழியைப் பயன்படுத்தல் என்பன முதன்மைப் போலச்செய்தலாகும். இது முன்நனவின் செயற்பாடுகளாக, சாதாரணமாக நிகழ்பவை. பிறர் செய்வதை உணர்வுடன் திரும்பச் செய்வது இரண்டாம்நிலைப் போலச் செய்தலாகும். அதாவது நனவுநிலையில் எழுதப் பழகுதல், விளையாடப் பழகுதல், கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

எனினும் சமூக ரீதியில் மனிதர்கள் ஒன்றைப் பின்பற்றுவதற்கும், பின்பற்றாமலிருப்பதற்கும் சில நிபந்தனைகள் காணப்படுகின்றன. அதாவது சில தேவைகளைத் திருப்தி செய்வதற்காக, அல்லது ஒரு இலக்கை அடைவதற்காக போலச்செய்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இளைஞர்கள் சினிமாக் கதாபாத்திரங்களைப் போல் உடை, சிகை அலங்காரங்களைச் செய்வதானது அவர்களது விருப்பத்தேவையினைப் பூர்த்தி செய்வதுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது.

பரிந்துரையின் மூலமான பின்பற்றல் என்பது ஒருவருடைய கருத்தினை எவ்விதக் காரணங்களுமின்றி அல்லது விசாரணைகளுமின்றி ஏற்றுக் கொள்வதைக் குறிக்கின்றது. அதாவது விளம்பரங்களின் போது குறிப்பிட்ட ஒரு உற்பத்தியை சினிமா நடிகர், விளையாட்டு வீரர், அல்லது அரசியல்வாதியொருவர் சிறந்தது எனப் பரிந்துரை செய்கின்ற போது அதனை ஏற்றுக்கொண்டு பின்பற்றுவதைக் குறிப்பிடலாம்.

எனினும் இத்தகைய பரிந்துரைகளை ஏற்றுக் கொள்வதில் ஒவ்வொரு பருவத்தினரும் வேறுபட்ட மனப்பாங்கினையும், நடத்தையினையும் வெளிப்படுத்துகின்றனர். அதாவது அதிகமான உணவுப்பண்டங்கள் மீதான பரிந்துரை குழந்தைகளையும் சிறுவர்களையும் மையப்படுத்தியதாகக் காணப்படுகின்றது. அதேபோல் ஒவ்வொரு வயதுப்பிரிவினரையும் கவரும் வகையிலான பரிந்துரை நுட்பங்கள் இதன்போது பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய ரீதியில் சமூக

நடத்தையில் பரிந்துரைமூலமான பின்பற்றலானது பிரதான இடத்தினை வகிக்கின்றது எனலாம். அதாவது இது சமூக நடத்தைகளை மாற்றியமைப்பதிலும்,கட்டுப்படுத்துவதிலும் பங்களிக்கின்றது.

அனுதாபம்(ளுலஅியவால)என்பது ஒருவர் மற்றையவர்களது உணர்வினைத் தானும் உணர்வதைக் குறிக்கின்றது. அதாவது சக மனிதர்கள் அனுபவிக்கும் உணர்வுகளைதானும் அனுபவிப்பதாகும். இதன்மூலம் பிறரது மகிழ்ச்சியை, துன்பத்தினை, அல்லது கோபத்தினை அதே உணர்வில் எம்மால் உணர முடியும். பிறரது பிரச்சினைகளையும் உணர்ச்சிகளையும் உணர்ந்து செயற்படுவது மனிதர்களை ஒன்றிணைப்பதுடன் சமூக உறவுகளையும் வலுப்படுத்துகின்றது.

### சமூக நடத்தையைத் தீர்மானிக்கும் காரணிகள்

### ஒத்துழைப்பும் போட்டியும்

ஒத்துழைப்பு என்பது ஒன்றிணைவின் வெளிப்பாடாகும். இது பல்வேறு தனிநபர்கள் ஒன்றிணைகின்றபோது சாத்தியமாகிறது. சமூக வாழ்வென்பது கூட்டுறவான சமூகத் தொடர்பாகும். குடும்பம், பாடசாலை,சமய அமைப்பு, வணிக நிறுவனம், தொழிற்துறை, மற்றும் அரசு என அனைத்தும் ஒன்றிணைவதன் மூலமும் ஒத்துழைப்பின் மூலமுமே இயங்குகின்றன. பெரும்பாலும் சமூக நடத்தையானது ஒத்துழைப்பின் விளைவானதாகும். போட்டி எனப்படுவது தனிநபர் அல்லது குழுச் செயற்பாட்டின் போதான வேலையின் வேகம், தரம் அல்லது அளவு என்பதன் சமப்படுத்த முறியடிக்கும் செயற்பாடாகும். போட்டி முறைச் சமூக நடத்தையை வெளிப்படுத்துவதாக சமூகக் கட்டமைப்பு காணப்படுவதன் விளைவு என இதனைக் குறிப்பிட முடியும்.

### கலாசார முறைமைகள்

சமூக நடத்தையை ஒழுங்கமைப்பதிலும், தீர்மானம் செய்வதிலும் கலாசாரத்தினை் பங்கு செல்வாக்கு மிக்கது. சமூக நடத்தையின் மாறுபாடுகள் கலாசார மாறுபாட்டின் விளைவானதாகக் கருதப்படுகின்றது. மேலும் தனிமனித ஆளுமைப் பண்புகளும் கலாசாரத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது என்ற கருத்தும் நிலவுகின்றது. சமூக நடத்தை மட்டுமன்றி சமூகப் பின்னணி, சமூக உறவுகள், சமூகத் தொடர்பாடல் என்பனவற்றில் காணப்படும் வேறுபட்ட தன்மை கலாசார வேறுபாடுகளால் உருவானதாகும்.

### சமூக நெறிமுறைகள்

சம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்கள், சமூகப் பெறுமானங்கள், மற்றும் சமூக நெறிமுறைகள் என்பன மாறுபட்ட கலாசாரங்களின் விளைவுகளாகும். சமூக நெறிமுறைகள் என்பது சமூக நடைமுறைகளாகும். இது சமூக நடத்தையின் நேரடிப் பிரதிபலிப்பாகும். ஒவ்வொரு சமூகத்திலும் பின்பற்றப்படும் நம்பிக்கைகள் குறிப்பிட்ட கலாசாரத்தின் விதிமுறைகளாகும். சமூக நெறிமுறைகள் விதிக்கின்ற சட்டதிட்டங்கள் சமூக நடத்தையினைக் கட்டுப்படுத்துபவையாகும். சமூக நெறிமுறைகள் மாறக்கூடியதும் மீள்கட்டமைப்புக்கு உட்படக்கூடியதுமாகும். கால மாற்றத்திற்கேற்ப அவை மாற்றமடைந்து செல்லும் போக்கினை வரலாற்றினூடாக அவதானிக்க முடியும்.

### சுய வெளிப்பாடு

சமூக நியதிகளைஏற்றுக் கொள்வது, தமது அந்தஸ்திற்கேற்ப சமூகப்பாத்திரங்களை வகிப்பது போன்றன ஒரு தனியனதுஅடையாளம், சுயம் போன்றவற்றில் நனவு நிலைகயினை உருவாக்குகின்றது. சமூக அனுபவங்களினூடாக சுயம் பற்றிய கருத்தியல் உருவாகிறது. இது ஒரு தனிநபரது விருப்பம், தெரிவு, பழக்கவழக்கங்கள் என்பவற்றினைத் தீர்மானிக்கின்றது. தனிநபர் நடத்தை, சமூக நடத்தையாக உருவாவதில் இது பங்களிக்கின்றது எனலாம்.

### சமூக மனப்பாங்கு

சமூகக் கற்றல் மற்றும் சமூக இடைவினைகளால் நபர்கள், விடயங்கள், சூழ்நிலைகள், பிரச்சினைகள் பற்றிய சமூக மனப்பாங்கு உருவாகிறது. சமூக மனப்பாங்கானது நேரடியாகவும் நிரந்தரமாகவும் சமூக நடத்தையைப் பாதிக்கக்கூடியதாகும். சமூக நடத்தையில் பெரும்பாலானவை சமூக மனப்பாங்கின் மூலமே தீர்மானம் செய்யப்படுகின்றன. சூழ்நிலைகள், பிரச்சினைகள் என்பவற்றை கருத்திற்கொண்டே நடத்தை, எண்ணங்கள், முயற்சி என்பவை மனப்பாங்கினால் தீர்மானிக்கப்படுகின்றன. எனவே மனிதர்களின்சமூக நடத்தைகளை மாற்றுவதிலும், கட்டுப்படுத்துவதிலும் சமூக மனப்பாங்கு முக்கியமானதாகும்.

### பொதுசன அபிப்பிராயம்

நிலவுகின்ற அரச முறைமைகளையும் அரசாங்க சட்டதிட்டங்களையும் மாற்றியமைக்கும் பெரும் சக்தியாக பொதுசன அபிப்பிராயம் காணப்படுகின்றது. இது தனிநபர் மற்றும்சமூக நடத்தைகளைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றது. இதனாலேயே அரசியலில் பொதுசன அபிப்பிராயத்தினை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க மற்றும் சட்டத்தெரிவுகள் இடம்பெறுகின்றன.

இதனாலேயே சமூக உளவியலாளர்கள் பொதுசன அபிப்பிராயத்தினது இயல்புகள், செயற்பாடுகள், அதன் உளவியல் சிறப்பியல்புகள்,மற்றும் அளவீடுகள் என்பவை தொடர்பில் கவனம் செலுத்துகின்றனர்.

### பிரச்சாரம்

பிரச்சாரம் என்பது பொதுமக்களின் அபிப்பிராயங்களை கட்டுப்படுத்துவதற்கும் தாக்கம் செலுத்துவதற்குமான சக்தி வாய்ந்த ஒரு வழிமுறையாகும். இது விரும்பத் தகுந்த வழிமுறையில் தனிநபர் மற்றும் சமூக மனப்பாங்குகளையும், நடத்தைகளையும் மாற்றுவதற்கான ஒரு நுட்பமாகும். பிரச்சாரத்தின் மூலம் விருப்பங்கள், தெரிவுகள், ஆர்வம் என்பவற்றில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்பதால் இது சமூக நடத்தையைத் தீர்மானிக்கின்ற காரணியாகிறது.

### சமூகக்குழுக்கள்

ஒழுங்கமைக்கப்பட்ட சமுதாயமானது குடும்பங்கள், சங்கங்கள், அமைப்புக்கள், நிறுவனங்கள், சேவைத்தளங்கள், தொழில்தளங்கள் போன்ற சமூகக் குழுக்களை உள்ளடக்கியதாகும். இவற்றினூடாக மனிதர்களது தேவைகளும், விருப்பங்களும் பூர்த்தி செய்யப்படுகின்றன. குழுக்களுக்குள்ளேயும் குழுக்களுக்கு வெளியேயும் நிகழும் சமூக இடைவினைகள் மூலம் சமூக நடத்தை தீர்மானிக்கப்படுகின்றது. குடும்பமானது முதன்மையான ஒரு சமூகக் குழுவாகும். சமூக நடத்தைகளின் அடிப்படைத் தளமாக குடும்பம் நோக்கப்படுகின்றது. பாடசாலை, அலுவலகம், நிறுவனங்கள் போன்றவை இரண்டாம்நிலைச் சமூகக் குழுக்களாகும். இவை அறிவார்ந்த ரீதியில் சமூக நடத்தைகளைத் தகவமைப்பதில் பங்களிக்கின்றது.

### நாகரீகப்பரம்பல்

நாகரீகம் என்ற பதமானது நடைமறையிலுள்ள பயன்பாட்டு முறைமைகள் அல்லது கலாசாரப் பண்புகளைக் குறிக்கிறது. நாகரீகம் என்பது வழக்கமான நடத்தையிலிருந்து குறுகிய காலத்தில் உருவாகும்விரைவான, மற்றும் முற்போக்கான மாற்றங்களைக் குறிக்கின்றன. நாகரீக மாற்றங்கள் பரந்த அளவில் சமூகத்தின் அனைத்து வகுப்பினரது நடத்தையிலும் பாதிப்புச் செலுத்துகின்றது. ஒருவர் நடந்து கொள்ளும் விதம், ஆடை அணியும் முறைமை, உணவுப்பழக்கவழக்கங்கள் என்பனவற்றில் ஏற்படும் மாற்றம் நாகரீக வெளிப்பாடாக அமையும். இதனை சமூக நடத்தையைத் தீர்மானிக்கும் முக்கிய அம்சமாகக் கொள்ளலாம்.

### சமூக மாற்றங்களும் முன்னேற்றங்களும்

சமூக மாற்றங்களை ஏற்படுத்துவதில் கலாசாரம், அரசியல், இயற்கை அனர்த்தங்கள் என்பவை பிரதான தாக்கம் செலுத்துகின்றன. இவ்வகையில் ஏற்படும் சமூக மாற்றங்களும், முன்னேற்றங்களும் சடுதியாகச் சமூக நடத்தையில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியவைகளாகக் காணப்படுகின்றன.

### மனித விருத்திப்பருவங்களும் சமூக நடத்தையும்

மனித விருத்திப் பருவங்கள் தொடர்பில் உளவியலில் பல்வேறு உளவியலாளர்களும் மாறுபட்ட விருத்திக் கோட்பாடுகளை முன்வைத்துள்ளனர். இவை உயிரியல், உடலியல், அறிகை, மற்றும் சமூக அடிப்படைகளைக் கொண்டிருந்தன. இவ்வகையில் சிக்மண்ட் பிறைட் (Sigmund Freud 1856-1939), ஜோன் வொட்சன் (John Watson 1878-1958),ஜீன் பியாஜே (Jean Piaget 1896-1980), எரிக் எரிக்சன் (Erik Erikson 1902-1994) போன்ற பல்வேறு உளவியலாளர்களின் விருத்திப் பருவங்கள் குறித்த கோட்பாடுகள் குறிப்பிடத்தக்க செல்வாக்குடையவையாகும்.

மனித விருத்தியில் மரபு மற்றும் சூழல் காரணிகளின் தாக்கம் பிரதானமானதாகும். குறிப்பாக குழந்தை வளருகின்ற சூழல், பெற்றுக்கொள்ளுகின்ற அனுபவம் என்பன ஒவ்வொரு விருத்திப்படிநிலைகளிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஒவ்வொரு விருத்திக் கட்டத்திலும் ஒருவர் எதிர்கொள்ளும் அனுபவங்களும், சவால்களும் சமூக விருத்தியில் பங்களிக்கின்றன. இதனடிப்படையில் ஒவ்வொரு வயதுப் படிநிலைகளுக்கேற்பவும் சமூக நடத்தையானது விருத்தியடைகின்றது. பிறந்தது முதல் முதுமையடையும் வரையில் மனிதர்கள் எவ்வாறு சமூகச் சூழ்நிலைகளுக்கேற்ப விருத்திநிலையை அடைகின்றனர் என்பது தொடர்பில் எரிக் எரிக்சன் உளச் சமூக விருத்திப் படிநிலைகளாக விளக்கியுள்ளார். இதில் இவர் ஒவ்வொரு வயதுப் படிநிலைகளிலும் சவால்கள்எவ்வாறு எதிர்கொள்ளப்படுகின்றன என்பதைக் கருத்தில் கொண்டு ஆளுமை விருத்தி மற்றும் சமூக நடத்தைப்போக்கு வேறுபடுகின்ற விதத்தினை எடுத்துக்காட்டுகின்றார். எரிக்சனின் கருத்தியலில் ஒரு தனியனின் குழந்தைப்பருவம் (Infancy) முதல் வளர்ந்தோர் பருவம் (Adulthood) வரையான உளச்சமூக விருத்திக்கட்ட மாற்றங்கள் விளக்கப்படுகின்றன.

ஒவ்வொரு தனியனும் தனது இருப்பை பிறப்பிலிருந்தே பெற்றுக்கொள்கிறது, ஆனால் சூழல்

மற்றும் சமூக, கலாசாரத் தாக்கமே அதன் இயல்பைத் தீர்மானிக்கின்றது. ஒவ்வொருவரும் எதிர்கொள்ளுகின்ற புதிய சவால்கள் அவர்களை எத்தகைய மனிதர்களாக உருவாக்குகின்றது, அதை அவர்கள் எதிர்கொள்ளும் விதம் அடுத்த படிநிலை விருத்தியில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது, ஒவ்வொரு விருத்திப் படிநிலைகளையும் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தல் அவனது எதிர்காலத்தில் எத்தகைய பிரதிபலிப்பாக அமையும் என்பது பற்றி எரிக்சன் தனது படிமுறை விருத்திக்கட்டங்களினூடாக விபரித்துள்ளார். மேலும் சமூக இடைவினைகளின் தாக்கம் எவ்வாறு ஒவ்வொரு விருத்திக்கட்டங்களிலும் சமூக நடத்தையினை மேம்படுத்துகின்றது என்பது தொடர்பிலும் எரிக்சனின் கருத்தியல் விளக்கமளிக்கின்றது. 'எரிக் எரிக்சனது' உளச் சமூக விருத்திப் படிநிலைகள்' (Psycho Social Development Stages) பின்வருமாறு,

1. குழந்தைப்பருவம்: பிறப்பு முதல் இரண்டு வயது வரை
2. முன் பிள்ளைப்பருவம்: இரண்டு முதல் நான்கு வயது வரை
3. ஆரம்பப்பள்ளிப்பருவம்: நான்கு முதல் ஐந்து வயது வரை
4. பாடசாலைப்பருவம்: ஐந்து முதல் 12 வயது வரை
5. கட்டிளமைப்பருவம்: 13 முதல் 19 வயது வரை
6. முன் இளமைப்பருவம்: 20 முதல் 40 வயது வரை
7. நடுத்தர வயதுப்பருவம்: 40 முதல் 64 வயது வரை
8. முதுமைப்பருவம்: 65 முதல் இறப்பு வரை

இதன்படி பிறந்தது முதல் இரண்டு வயது வரையான குழந்தைப் பருவத்தில் குழந்தைகள் தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பெற்றோரிலேயே தங்கிக் காணப்படுவர். பெற்றோர் - குழந்தைக்கு இடையிலான தொடர்பு நம்பிக்கையை உருவாக்குவதாக அமைகின்றது என்பது எரிக்சனின் கருத்தாகும். அதாவது குழந்தையின் முதல் நம்பிக்கை எப்போதும் பெற்றோரைச் சார்ந்ததாகும்.பெற்றோரிடமிருந்தே குழந்தைகள் சமூக மனப்பாங்கினையும் சமூக நடத்தையினையும் தகவமைத்துக் கொள்கிறது. இதன்படி குழந்தைகளின் முதலாவது சமூகத் தொடர்பு பெற்றோரேயாவர். இச்சமூக உறவிலிருந்தே குழந்தைகள் சமுதாயத்தைப் பற்றிய புரிதலைப் பெற்றுக்கொள்கின்றனர். குழந்தையிடம் நம்பிக்கையான சமூகப் பார்வையை உருவாக்குவது பெற்றோரது அரவணைப்பு மற்றும் பாதுகாப்பான கவனிப்பிலேயே தங்கியுள்ளது. மாறாக பெற்றோரிடமிருந்து பாதுகாப்பும், அன்பும் கிடைக்காத பட்சத்தில் குழந்தையிடம் அவநம்பிக்கை உணர்வு ஏற்படும். இது குழந்தையின் சமூக நடத்தையினைப் பாதிப்பதோடு, சமூகமயமாதலையும் தடை செய்யக்கூடியதாகும்.

இரண்டு முதல் நான்கு வயது வரையான முன்பிள்ளைப் பருவத்தில் குழந்தைகள் தமது சமூகச்சூழல் பற்றி அறிந்து கொள்ள முற்படுவர். இதன்போது பிள்ளை உணருகின்ற வலுவான பாதுகாப்பு சுதந்திரமான அறிதலுக்கு வழிவகுக்கின்றது. இவ்வயதில் பிள்ளைகள் சமூகச் செயற்பாடுகளை உற்று நோக்குகின்றனர். பிறரது விருப்பம், தெரிவு, இரசனை என்பவற்றை உணர்ந்து தனது விருப்பம், தெரிவு,இரசனை என்பதை உருவாக்குவதன் மூலம் சமூக இடைவினையாற்றலுக்குத் தயாராகின்றனர். இதன்போதான சமூக எதிர்கொள்ளலானது தடையின்றிய முன்னோக்கில் ஊக்கப்படுத்தப்படுதல் அவசியமானதாகும்.

மேலும் இவ்வயதில் குழந்தைகள் சமூகத்தை ஆர்வத்தோடு எதிர்நோக்கினாலும் சுய செயற்பாடுகளில் ஈடுபட முனைவர். அதாவது தனது அன்றாடச் செயற்பாடுகளை பிறரது உதவியின்றிச் செய்ய விரும்புவர். இத்தகைய சுய நடத்தைகள் ஊக்குவிக்கப்படுகின்ற போது சவால்களை எதிர்கொள்ளும் திறன்களையும், சுதந்திரத்தையும் பெறுவர். ஊக்குவித்தல் கிடைக்காத போது பிள்ளைகளிடம் சமூகத்தின் மீதான அவநம்பிக்கை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

நான்கு முதல் ஐந்து வயது வயது வரையான ஆரம்பப் பள்ளிப்பருவமானது பிள்ளைகளின் சமூகத்தொடர்பு மற்றும் சமூக இடைவினைகள் அதிகரித்த காலப்பகுதியாகும். இவ்வயதுப் பிரிவினர் சுயமாக இயங்குதல், சுதந்திரமாகத் திட்டமிடல், சுய முனைப்போடு செயற்படுதல் போன்ற சமூக நடத்தைகளை வெளிப்படுத்த முனைவர். இந்நடவடிக்கைகள் பிறரால் ஊக்கப்படுத்தப்பட வேண்டும் என்பதே இவர்களது எதிர்பார்ப்பாகக் காணப்படும். சமூக இடைவினையாற்றலில் தடை ஏற்படுகின்ற போது இலகுவாகக் குற்ற உணர்வுக்கு ஆளாவர். இதனால் சமூக நடத்தை பாதிப்புக்குள்ளாகும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

அதாவது இது பாடசாலைக்குச் செல்லும் பருவம் என்பதால் சமூகமயமாதலின் ஆரம்பப்பருவம் எனலாம். இதன்போது ஒத்த வயதுக் குழுவினருடனான பரிட்சயம் அதிகளவில் ஏற்படுகின்றது. இதனால்

தைரியமானதும், சுதந்திரமானதுமான சமூக நடத்தையினை இவர்கள் வெளிப்படுத்துவர். இது சமூகப்பங்குபற்றல் தலைமைத்துவப் பண்பினை விருத்தி செய்யக் கூடியதாகும். எனினும் முழுமையான சமூக அறிவினைப் பெற முடியாத பருவம் என்பதால் கண்காணிப்பும், வழிகாட்டுதலும் அவசியமானது.

எனவே ஆரம்பப்பள்ளிப்பருவத்தில் சுய முனைப்புடனான செயற்பாடுகள் சமூக வழிநடத்தலுக்கு உட்படுத்தப்படுகின்ற போது நேர்மறையான சமூக நடத்தையினை உருவாக்க முடியும். மாறாக அவர்களது சுதந்திரமான செயற்பாடுகளுக்குத் தடை விதிப்பது எதிர்மறையான சமூக நடத்தைகளைத் தோற்றுவிக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐந்து வயது முதல் பன்னிரண்டு வயது வரையான பாடசாலைப்பருவமானது சமூக விருத்தியின் செயல்திறன் இயக்கப்பருவமாகும். இப்பருவம் வரையான மூன்று வயதுக்கட்டங்களிலும் இடம்பெறும் சமூக இடைவினை சரியாக அமைகின்றபோது இதற்குப் பின்னரான சமூக நடத்தை திறம்பட்டதாக அமையும். முந்திய பருவங்களின் சரியான போக்கு புதிய சூழ்நிலைகளை சிறப்பாகக் கையாளவும் புதிய சமூகக் களங்களை எதிர்கொள்ளவுமான திறனை பிள்ளைகளுக்கு வழங்கும்.

இப்பருவத்தில் பிள்ளைகள் ஒரு தனிநபராக தான் யார் என்பதை உணருகின்றனர். தனது செயற்பாடுகளின் சரி – பிழையை உணர்ந்து அதனை நல்லதாகவும் சரியானதாகவும் மேற்கொள்ள விடாமுயற்சியை மேற்கொள்கின்றனர்.அத்தோடு ஒழுக்கப் பெறுமானங்களை மதிப்பவர்களாகவும், கலாசார வேறுபாடுகளை உணர்ந்தவர்களாகவும், தனிநபர் வேறுபாடுகளை அறிந்தவர்களாகவும் சமூக நடத்தைகளை வெளிப்படுத்துவர். இவ்வயதில் பிள்ளைகள் சமூகத் தொடர்பாடலை அதிகரிப்பதற்காக எதிர்த்துப் பேசுதல், கீழ்ப்படியாமல் இருத்தல், சண்டையிடுதல் போன்ற செயற்பாடுகள் மூலம் சுதந்திரமாகச் செயற்பட முற்படுவர்.

இக்காலகட்டத்தில் பிள்ளைகள் சமூகமயமாதல் முகவர்களான பெற்றோர், ஆசிரியர் மற்றும் நண்பர்களுடன் இணைந்து செயற்படுவதற்கான முனைப்பைப் பெறுவர். குழுக்களாக விளையாடுதல், குழுவாகச் செயற்படுதல், குழுவாகப் பிரச்சினை தீர்த்தல் என்பவற்றை மேற்கொண்ளவதன் மூலம் சமூக நடத்தை அடுத்த கட்டத்தை நோக்கி விருத்தியடைவதற்கான நடத்தைகளை வெளிப்படுத்தும் காலப்பகுதியாகவும் இப்பருவம் காணப்படும்.

இதன்போது அவர்களது செயற்பாடுகளுக்காக ஊக்கப்படுத்தல்களையும், பாராட்டுக்களையும் வழங்குகின்றபோது அவர்கள் சிறப்பாகச் செயற்படவும், குறித்த விடயத்தில் தன்னை நிருபிக்கவும் விடாமுயற்சியுடனான கடின உழைப்பை வழங்குவர். இவர்களது செயற்பாடுகள் விமர்சிக்கப்பட்டால், தண்டனைக்குரியதானால், இழிவுபடுத்தப்பட்டால் பெற்றோரினதும், ஆசிரியர்களினதும் நன்மதிப்பைப் பெறமுடியாது என்ற குற்ற உணர்ச்சிக்கும் தாழ்வு மனப்பான்மைக்கும் ஆட்படுவர். இது அவர்களது சமூக நடத்தையில் தாக்கம் செலுத்துவதாக அமையும்.

பதின்மூன்று தொடக்கம் பத்தொன்பது வயது வரையான காலப்பகுதியானது கட்டிளமைப்பருவம் எனவும்இப்பருவம் சமூக அடையாளத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது எனவும் அடையாளப்படுத்தப்படுகிறது. இங்கு தங்களது எதிர்காலத் திட்டமிடல் அல்லது அடைவிற்கான தளத்தை உறுதியாகத் தீர்மானிக்கும் காலகட்டமாக இது இளையோர்களால் கொள்ளப்படும். அதாவது தனது இயலுமை, இலக்கு, எதிர்காலம், தொழில் என்பவை பற்றிய தனித்துவமான அடையாளங்களை உருவாக்கவும் அதன் மூலம் சமூக அந்தஸ்த்தினைப் பெறவுமான செயற்பாட்டைக் கொண்டிருப்பர். இப்பருவத்தில் தன்னைச் சமூகத்தின் ஒரு அங்கமாகப் பார்க்கத் தொடங்குவதால் தனது சமூக இடைவினை, சமூக நடத்தை என்பவற்றில் நனவுநிலையான கவனித்தலைச் செலுத்துபவர்களாகக் காணப்படுவர்.

எனினும் சமூகத்திற்கு ஒப்பான, சமூகத்தோடு பொருந்தக்கூடிய அடையாளத்தை சமூகம் விரும்புகின்றபோது இவ்வயதினர் தன்னை எவ்வாறு வெளிப்படுத்திக் கொள்வது என்பது தொடர்பில் குழப்பமான எண்ணங்களைக் கொண்டிருப்பர். அதாவது இப்பருவத்தில் பல சிக்கலான விடயங்கள் தொடர்பான ஆர்வமும் விருப்பமும் இவர்களிடம் காணப்படும். இறுதியில் நான் யார்?, என் வாழ்க்கை எங்கு செல்கிறது? என்ற ரீதியில் தனக்கானதொரு சமூக அடையாளத்தை உருவாக்க முற்படுவர் என்பது உளவியலாளர்களது கருத்தாகும்.

இறந்தகாலத்தின் நடத்தைகள் மீதான பரீசிலனையாகவும் எதிர்கால வாழ்க்கை பற்றிய திட்டமிடலுடனும் இப்பருவம் அடையாளப்படுத்தப்படுவதால் இப்பருவத்தினர் தங்களது சமூகப் பாத்திரம் தொடர்பில் குழப்பமான மனநிலையினைக் கொண்டிருப்பர். அதாவது

தீவிரமான உடல் மாற்றத்தையும், உள மாற்றத்தையும் எதிர்கொள்ளுகின்ற இக்காலப்பகுதியில் இப்பருவத்தினர் தமது எண்ணங்களைப் பிறரது எண்ணங்களோடு ஒப்பீடு செய்து வேறுபாடுகளை உணர முற்படுகின்றனர். இதன்போது சமூக நடத்தைகளில் உன்னிப்பாக அவதானம் செலுத்துகின்றனர்.

சமூகம் உருவாக்கும் சட்டதிட்டங்களையும் தனது சுய உணர்வினையும் ஒப்பீடு செய்து அதிலிருந்து வாழ்க்கைக்கான அடையாளத்தை உருவாக்குவது பற்றிய குழப்பநிலை இப்பருவத்தினருக்கு ஏற்படுகின்றது. இதனால் சமூகச் சூழ்நிலைகளுடன் பொருந்தி வாழ்வது இவர்களுக்கு சிக்கலானதாக அமைய வாய்ப்புண்டு.

'இப்பருவத்தினரிடம் காணப்படும் நம்பிக்கைகள், பெறுமானங்கள், ஆர்வங்கள் என்பன சுய அடையாளத்தை (ரீசளழயெட ஐனநவெவைல) உருவாக்குவதில் அதிக பங்கு வகிக்கின்றது. இப்போது பெற்றோர்களின் உறவு, சமூகப் பண்பாடு ஆகியவையும் சகபாடியின் உறவும், செல்வாக்கும் இளையோரின் மீது திணிக்கப்படுவதால் இவர்கள் குழப்பத்திற்கு உள்ளாகின்றனர். தங்களது பருவத்திற்குரிய மனவெழுச்சி இக்காலப்பகுதியில் மேலோங்கி நிற்பதால் மேலும் இவர்கள் குழப்பமடைகின்றனர். இது'சுய அடையாளக் குழப்பநிலை' (Personal Identity Confusion) எனப்படும். சமூக ஒழுக்கம், பண்பாடு, மரபு என்பவைகளுக்கும் இளையோருக்குமிடையில் ஒருபோதும் உடன்பாடிருப்பதில்லை. இக்குழப்பநிலை இளையோர் தமது சுய அடையாளத்தை நிறுவ முடியாமலாக்குகிறது. இத்தடையின் விளைவாக எதிர்மறை சுய அடையாளம் (Negative Personal Identity) இவர்களில் உருவாகக்கூடும். இந்நெருக்கடியான நிலை தீவிரச் செயல்களில் ஈடுபடத்தூண்டும். அதாவது போதைப் பொருட்பாவனை, குற்றச்செயல், பாலியல் வல்லுறவு என அது தற்கொலை வரை நீடித்துச் செல்லும்'. இந்நிலை சமூக நடத்தையில் மாறுபட்ட பரிமாணத்தை ஏற்படுத்தக் கூடியவைகளாகும்.

இருபது வயது முதல் நாற்பது வயது வரையான முன் இளமைப்பருவத்தில் சமூக அடையாளம் தொடர்பில் காணப்பட்ட குழப்பம் முடிவுக்கு வருகிறது. இப்பருவத்தில் தமக்கான அடையாளம் தொடர்பில் ஒரு தெளிவான போக்கு காணப்படுவதால் சமுகமயமாதல் முகவர்களோடு அதனைப் பொருத்திப் பார்க்கும் சமூக நடத்தையினை வெளிப்படுத்துவர். இப்பருவத்தினர் தமது சமூக நடத்தையில் நெருக்கமான சமூக உறவுகளைப் பேணும் முறையைக் கடைபிடிக்க முற்படுவர்.

இவ்வயதினர் தனது அடையாளத்தை நிறுவிக் கொண்டதன் பிற்பாடு ஒரு நீண்டகாலத் திருமண உறவுக்குத் தயாராகின்றனர். இது ஒருவர் தன்னை ஒரு சமூக அலகாக மாற்றிக் கொள்ளும் எத்தனிப்பாகும். இது சமூக முதிர்ச்சியை ஏற்படுத்துவதோடு இது நிகழாத விடத்து தன்னைச் சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தும் நிலைக்குச் செல்லவும் தூண்டக்கூடியதாகும்.

நாற்பது வயது முதல் அறுபத்தி நான்கு வயது வரையான நடுத்தர வயதுப்பருவம் அடுத்த தலைமுறைச் சமூகத்திற்கு முன்மாதிரியாகத் திகழக்கூடிய பருவக்காலமாகும். அதாவது சமூக நன்மதிப்பும், ஒழுக்க நியமங்களையும் கொண்ட காலப்பகுதியாகும். இவ்வயதுப் பிரிவினரில் தங்கியிருக்கும் குடும்பம், உறவுகள், வேலைத்தளம் போன்றவை காணப்படும். இவர்களது சமூக நடத்தையானது சமூகப்பயன் மிக்கதாக அமைந்திருக்கும். இதனால் சமூகத்திற்குப் பங்களிப்புச் செய்வதும் எதிர்காலச் சந்ததியினர்களுக்கு வழிகாட்டுவதுமே இவர்களது பிரதான பணியாகக் காணப்படும்.

அறுபத்தி ஐந்து வயதுக்கு மேற்பட்டவர்களான முதுமைப்பருவத்தினர் தங்களது சமூக வாழ்க்கையிலிருந்தும் தொழிலிலிருந்தும் ஓய்வினைப் பெற்றவர்களாவர். இவர்கள் சமூகத்தின் மூத்த குடிமக்களாக நோக்கப்படுகின்றனர். இவர்கள் தங்களது சமூகச் செயற்பாடுகள் தொடர்பான பின்னோக்கிய கணிப்பின் மூலம் திருப்தியையும், திருப்தியின்மையையும் நோக்கியவர்களாவர். இவர்களது கடந்த கால வாழ்க்கை மகிழ்ச்சியானதாகக் காணப்படின் நேர்மறையான உணர்வையும் மகிழ்ச்சியற்றதாக இருப்பின் எதிர்மறையான உணர்வையும் பெறுகின்றனர். இவ்வயதுப்பிரிவினர் உடல், உள, சமூக ரீதியாக பலயீனமடைந்தவர்களாகக் காணப்படுவதால் இவர்களது சமூக நடத்தையில் இறங்குநிலையான போக்குக் காணப்படும்.

## முடிவுரை

சமூக நடத்தையானது சமூகச் சூழ்நிலைகளின் அடிப்படையில் பரிணாமம் பெறுவதாகும். சமூகத் தொடர்புகள் மூலமாக விரிவாக்கம் பெறும் சமூகச் சூழ்நிலையானது மனிதர்களது இடைவினை மற்றும் எதிர்வினைகளால் புரிந்து கொள்ளப்படுகின்றது. மனிதர்களது தொடர்பு மூலங்களான மொழி, சைகை, எழுத்து, பேச்சு என்பவை சமூகச் சூழ்நிலைகளில் பங்களிப்பதனூடாக சமூக நடத்தை உருவாக்கம் பெறுகின்றது.

இதனடிப்படையில் சமூக நடத்தையானது சமூகச் சூழ்நிலைகளுக்கேற்றவாறான சமூக இடைவினையாற்றலால் நிகழ்கின்றது எனலாம். இதனால் உருவாக்கம் பெறும் சமூகச் செயற்பாடுகளாக கருத்துக்கள், வழக்காறுகள்,மொழி, கலை, இலக்கியம், விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். மனிதர்கள் தனித்துச் செயற்படக் கூடியவர்கள் என்பதோடு ஒருவரில் ஒருவர் தங்கியிருப்பவர்களாகவும் காணப்படுகின்றனர். இத்தகைய சமூக இணைவானது மனிதத் தேவைகளைச் செம்மைப்படுத்துவதோடு ஆளுமை விருத்தியிலும் பங்களிக்கின்றது. அதாவது மாறுபட்ட ஆளுமைப் பண்புகளைக் கொண்டவர்கள் சமூக இணைவினைப் பெறுகின்றபோது பண்பு மாற்றங்களுக்கும், நடத்தை மாற்றங்களையும் எதிர்கொள்கின்றனர். இந்நிலை சமூக நடத்தையில் செல்வாக்குச் செலுத்துவதாக அமைகின்றது.

பிறக்கும் போதே மனிதன் சமூக நடத்தையினை வெளிப்படுத்துவதில்லை. வளரும்போதான சமூக இவினைகளும், சமூகச் சூழ்நிலைகளும் அவனை சமூக நடத்தையுடையவனாக உருவாக்குகின்றது. இதனடிப்படையில் ஒவ்வொரு விருத்திக் கட்டங்களிலும் சமூக நடத்தைப் பரம்பல் விரிவடைந்து செல்வதை சமூக உளவியல் கவனம் கொள்கின்றது. இதனூடாக மனிதனது சமூக நடத்தையினை சமூகக் காரணிகளும், அவன் பெற்றுக்கொள்ளும் அனுபவங்களும் தீர்மானம் செய்கின்றன என்பது புலனாகிறது.

**உசாத்துணைகள்**


1. Bandura, A.,(1969), Principles of BehaviorModification, New York: Holt. Rinehart & Winston.
2. Erikson, E. H., (1968), *Identity: Youth and crisis,* New York: Norton.
3. Erikson, E. H., (Ed.).,(1963), *Youth: Change and challenge*, New York: Basic books.
4. John Elster, College de France, (2007), Explaining Social Behaviour, Cambridge University Press.
5. Kuppuswamy, B., (2004), An Introduction to Social Psychology,Mumbai :Media Promoters and Publishers Pvt. Ltd.
6. Mangal, S.K.,(2006), General Psychology,New Delhi:Sterling Publishers pvt. Ltd.
7. Wood worth, R.S.,(1945), Psychology, London: Methuen.